DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

SC-439/2019

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : Thiru. Kothandapani PW-5

Father Name :

Adress :

Age/Sex :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of January 2023.

---

**முதல் விசாரணை:-**

நான் நெ.31/13A, சேனியம்மன் கோவில் தெரு, 4வது சந்து, தண்டையார்பேட்டை, சென்னை-81 -ல் வசித்து வருகிறேன். நான் தற்பொழுது மணலி அருகில் உள்ள தச்சூரில் மூட்டை தூக்கும் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன் நான் திருவொற்றியூரில் உள்ள கார்பேரண்டம் யுனிவர்செல் கம்பெனியில் வேலை செய்து பணி ஓய்வு பெற்றேன். இந்த வழக்கில் இறந்துபோன ஸ்ரீதர் என்பவர் எனது வீட்டு அருகில் வசித்தவர் ஆவார். கடந்த 31.07.2019 அன்று காலை 6.30 மணிக்கு வேலைக்கு புறப்பட்டு சென்றேன். இரவு 10.30 மணிக்கு பிறகு தான் வீட்டிற்கு திரும்பினேன். நான் வீட்டிற்கு வந்தபோது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஸ்ரீதர் என்பவருக்கும் வேறு ஒரு நபருக்கும் தகராறு நடந்ததாக கூறினார்கள். அந்த தகராறில் அடிப்பட்ட ஸ்ரீதர் என்பவர் மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக கூறினார்கள். நான் மறுநாள் காலை வழக்கம் போல் வேலைக்கு சென்றுவிட்டு மாலை வீட்டிற்கு திரும்பும் போது ஸ்ரீதர் இறந்துவிட்டதாக அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கூறினார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. இறந்து போன ஸ்ரீதருக்கும் வேறு ஒரு நபருக்கும் எதனால் தகராறு

ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கக் கோரி கேட்டுக்கொண்டதன் பேரில் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு , அனுமதி வழங்கப்பட்டது )**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இவ்வழக்கில் போலீஸ் விசாரணையின் போது கடந்த எங்கள் வீட்டு பக்கத்தில் ஸ்ரீதர் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றும், அவர் ஆட்டோ ஓட்டி வந்தார் என்றும் அவருக்கு ஒரு மகள் ஒரு மகள் உள்ளார்கள் என்றும் மகன் தனுஷ் மெக்கானிக்கல் இஞ்சினியரிங்க் படித்து வருகிறான் என்றும் அவரது மனைவி கலைவாணி வீட்டு நிர்வாகத்தை கவனித்து வருகிறார் என்றும் மகள் திருமணம் ஆகி தனியாக வசிக்கிறார் என்றும் இந்நிலையில் கடந்த 31.07.2019-ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் ஸ்ரீதரின் வீட்டின் அருகில் ஸ்ரீதரின் மனைவியும் அவரது மகனும் கத்தும் சத்தம் கேட்டு நான் வெளியில் வந்து பார்த்த போது ஸ்ரீதரை அவரது எதிர் வீட்டில் வசிக்கும் வாசு என்பவர் வழி மறித்து ஒத்தா டேய் தேவிடியா பையா இன்னும் எவ்வளவு நாள்டா ஆகும் பணம் தருவதற்கு, ஓத்தா இன்னைக்கு உன்ன உயிரோட விடமாட்டேன் என்று கூறி வாசு ஸ்ரீதரை கைகளால் அடித்து கீழே தள்ளி அருகில் காலியாக இருந்த 20 லிட்டர் வாட்டர் கேனை எடுத்து இத்தோடு சாவுடா என்று ஸ்ரீதரின் தலையிலேயே சரமாறியாக அடித்து கொண்டு இருந்தார் என்றும் அப்பொழுது ஸ்ரீதரின் மகன் மற்றும் அவரது மனைவியும் ஓடி போய் ஸ்ரீதரை காப்பாற்ற போனார்கள் என்றும் வாசு அவர்களையும் அடிக்க போய் ஓத்தா கிட்ட வந்தா உன் அப்பனுக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும் என்று வாட்டர் கேனை காட்டி அவர்களளை மிரட்டினான் என்றும் அவன் கேனை காட்டி மிரட்டவே நான் பக்கத்தில் போகவில்லை என்றும் தனுஷூம் ஸ்ரீதரின் மனைவியும் சத்தம் போட்டு கூச்சலிட்டார்கள் என்றும் வாசு வாட்டர் கேனை ஸ்ரீதர் மீது தூக்கிப்போட்டு விட்டு ஸ்ரீதரை பார்த்து நாளைக்கு நீ பணத்தை கொடுக்கவில்லை என்றால் உன்னை குடும்பத்தோடு கொளுத்திடுவேன் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து ஓடி விட்டார் என்றும் வாசு அடித்ததில் ஸ்ரீதருக்க தலையில் வீக்கமாக இருந்தது என்றும் , உடனே ஸ்ரீதரை

அவரது மகன் மற்றும் மனைவி ஆகியோர் மருத்தவமனைக்கு கூட்டி சென்றார்கள் என்றும், இது சம்மந்தமாக எச்.-5 காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறிவிட்டு தற்பொழுது உண்மையை மறைத்து ஆஜர் எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**:- எதிர் தரப்பில் இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt. 12-01-2023. II Addl. District Judge.

s